





அமரர்

# திருமதி.மங்களகௌரி தயாளநேசன்

(அதிபர், கொக்குவில் மேற்கு யா/ சி.சி.த.க பாடசாலை)

அவர்களின் சிவப்பேறு குறித்த

# நினைவு மலர்

21.06.2015

உ

சிவமயம்



நயினாதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்,
கொக்குவில் மேற்கு ஆடியபாதம் வீதி,
1ம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட
உயர் சைவ வேளாண்குல மரபில் உதித்த
எமது பாசமிகு அன்னை

## அமரர்
# திருமதி மங்களகௌரி தயாளநேசன்

(அதிபர், கொக்குவில் மேற்கு சி.சி.த.க. பாடசாலை)

அவர்களின் இறைபதம் குறித்த

# நினைவு மலர்

**21-06-2015**

# சமர்ப்பணம்

வையத்தில் மனிதருள் மாணிக்கமாய் பிறந்து
மண்ணில் மங்கையாய் வாழ்ந்துயர்ந்து
எமது குல விளக்காய், அன்னையாய்,
வாழ்வாங்கு வாழ்ந்து, எம்மை வழி நடத்தி,
அன்புடனும் பண்புடனும் எம்மை வளர்த்து
எம் வாழ்வுக்காக தன்னையே அர்ப்பணித்து
பல குடும்பங்களின் நல் வாழ்வுக்காக வழிகாட்டி
அக் குடும்பங்களின் வாழ்வில் கல்வி ஒளியூட்டி
இன்று வானுறையும் தெய்வமாகி விட்ட
எம் அன்புத் தெய்வத்தின் திருப்பாதங்களில்
நிறைந்த பக்தியுடன் வணங்கி எங்கள் இதயம்
நிறைந்த அன்பு மலரை காணிக்கையாகச்
சமர்ப்பிக்கின்றோம்.

எமது அன்பு அன்னையே உம்மை மறக்க முடியாமல்
துடிக்கும் நாம் உங்கள் ஆத்மா சாந்தியடைய
வீரபத்திரப் பெருமானை வேண்டி பிரார்த்தித்து
இப்பாச மலரை உங்கள் பாதங்களில்

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம்
குடும்பத்தினர்


நயினை நாகபூசணி துணை.



மலர்வு
1957.04.09

உதிர்வு
2015.05.21

# அமரர்
# திருமதி மங்களகௌரி தயாளநேசன்

(அதிபர், யா/ கொக்குவில் மேற்கு சி.சி.த.க பாடசாலை)

## திதி வெண்பா

தூய மன்மத வருடம் துளிர்த்த வைகாசியின்
மேய அமரத் திதி திருதியையே - நாயகியாம்
நல்லோர் போற்றும் மங்களகௌரி தயாளநேசன்
வல்ல பூரணி அடி சேர்ந்த நாள்.

உ
சிவமயம்



# தோத்திரப் பாடல்கள்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்தனை ஞான கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

உற்றுமை சேர்வது மெய்யினையே
யுணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பது முன்பணியே
அமரர்கள் செய்வது முன்பணியே
பெற்று முகந்தது கந்தனையே
பிரம்ம புரத்தினை யுகந்தனையே.

## திருவாசகம்

தந்த துன் தன்னைக் கொண்ட தென்தன்னை
சங்கரா ஆர் கொலோ சதுரர்
அந்த மொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்ற தொன்றென்பால்
சிந்தையே கோயில் கொண்ட வெம்
பெருமான் திருப்பெருந்துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடனிடம் கொண்டாய்
யானிதர் யெனோ கைமாறே

## திருவிசைப்பா

நையாத மனத்தினை ஞ்நவிப்பான் இத் தெருவே
ஐயா நீ உலாப் போந்த அன்று முதல் இன்று வரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில
தேவர் சிறு நெறி சேராமே
வில்லாண்ட கன்கத் திரள்
மேரு விடங்கன் விடைப் பாகன்
பல்லாண் டென்னும் பதங் கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

தண்ணளிவெண் குடை வேந்தன் செயல் கண்டு தரியாது
மண்ணவர்கள் மழை பொழிந்தார் வானவர்பூ மழை சொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே யணிவீதி மழலைவிடை மேல்
விண்ணவர்கள் தொழ நின்றார் வீதி விடங்கப் பெருமான்.


## திருப்புகழ்

துள்ளுமத வேள்கைக் கணையாலே
தொல்லை நெடு நீலக் கடலாலே
மெள்ளவரு சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே
தெள்ளு தமிழ் பாடத் தெளிவோனே
செய்ய குமரேசத் திறலோனே
வள்ளல் தொழு ஞானக் கழலோனே
வள்ளி மணவாளப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்



## திருமதி. மங்களகௌரி தயாளநேசன்

### (அதிபர், கொக்குவில் மேற்கு சி.சி.த.க. பாடசாலை) *அவர்களின்*

# வாழ்க்கை வரலாறு

ஈழ மணித் திருநாட்டில் யாழ்ப்பாண குடா நாட்டின் சப்த தீவுகளுக்கு நடு நாயகமாக விளங்கும் அறுபத்து நான்கு சக்தி பீடங்களுள் ஒன்றான புவனேஸ்வரி பீடமாக விளங்குவதும் அன்னை ஸ்ரீ நாகபூசணி அம்பாள் அமர்ந்திருந்து அருளாட்சி புரிவதும் மணி பல்லவம் என்று பல ஆராட்சியாளர்களால் சிறப்பிக்கப்படும் இலக்கிய சிறப்பு மிக்கதும் புத்த பகவானின் புனித பாதங்கள் பட்ட தலமாக பௌத்தர்களால் வணங்கப்படுவதுமான சர்வ மத சந்நிதியாக விளங்குவதும் நீர்வளமும், நிலவளமும், அருள்வளமும் ஒருங்கே பெற்ற சிறப்பு மிக்க நயினைப் பதியில் பிறக்கவும், இறக்கவும் புண்ணியம் செய்திருக்க வேண்டுமென்பது சான்றோரினதும், ஆன்றோரினதும் உறுதி மிக்க கருத்தாகும்.

"வையத்துள் வாழ் வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்பது வள்ளுவர் மொழியாகும். மனிதன் மனிதனாக வாழும் வாழ்க்கையானது வையத்துள் வாழ்வாங்கு வாழும் வாழ்க்கை என்று குறிப்பிடப்படுகின்றது. இந்த வகையில் நோக்கும் போது வாழ் வாங்கு வாழும் வாழ்க்கை இவ்வுலகில் சிலருக்கே இருக்கின்றது. அச் சிலரில் அமரர் திருமதி மங்களகௌரி தயாளநேசன் (அதிபர், கொக்குவில் மேற்கு சி.சி.த.க. பாடசாலை) அவர்களும் ஒருவராவர். இவர் நலன்மிகு மாதரில் ஒருவராக நம்முடன் வாழ்ந்து 21-05-2015 அமரத்துவம் எய்தியவரும் "பேபி" என்று செல்லமாக பெயர் தாங்கி பாடசாலை அதிபர் பதவியை அலங்கரித்துக் கொண்டவர் தான் திருமதி மங்களகௌரி அம்மையார் அவர்கள்.

நயினாதீவு 3ம் வட்டாரத்தில் சைவ வேளான் குலத்தில் உடையார் மரபில் தோன்றிய அமரர். கணபதிப்பிள்ளை குமரையா அவர்கள் இரகுநாதர் மகள் மகேஸ்வரி (அமரர்) எனும் நங்கை நல்லாளுடன் நடாத்திய இல்லறத்தின் பயனாக உதித்த நல் முத்துக்களான மங்களகௌரி (அதிபர்), ரவீந்திரன்( பொறுப்பதிகாரி, பிரதேச சபை நயினாதீவு) ஆகியோராவர். இவர்களுள் அமரர் திருமதி மங்களகௌரி 09-04-1957 ம் ஆண்டு இம் மண்ணில் பிறந்தார். வளரும் பிள்ளையயை மண் விளையாட்டில் தெரியும் என்பார்கள். அவ் வகையில் இவர் ஆரம்பக் கல்வியை நயினாதீவு நாகபூஷணி வித்தியாலயத்திலும் தொடர்ந்து கல்வியை யாழ்/ கனகரத்தினம் மகா வித்தியாலயத்திலும் கற்றுக் கொண்டார். கல்வி கற்கும் காலத்தில் பாடசாலை நிகழ்வுகள் பலவற்றிலும் பங்கு கொண்டு பல்வேறு போட்டிகளில் திறமை காட்டி பரிசில்களைப் பெற்று கல்வியில் குறிப்பாக விஞ்ஞானத்துறையில் சிறப்பாக பிரகாசித்து மிளிர்ந்தது மட்டுமல்லாது துறைசார் ஆசிரிய பதவியும் இவரைத் தேடி வந்தது. 1978ம் ஆண்டு முதல் நியமனம் பெற்று நயினாதீவு கணேச வித்தியாலயத்திற்கு கடமை பொறுப்பினை ஏற்றுக் கொண்டார். பின்பு நயினாதீவு மகா வித்தியாலயத்திலும்கடமையாற்றிய பின்னர் ஆசிரியர் பயிற்சிக்காக பலாலி ஆசிரிய கலாசாலைக்கு சென்று பயிற்சியை நிறைவு செய்தார். பயிற்சியின் பின் தொடர்ந்து வவு/ஓமந்தை மத்திய கல்லூரி, வவு/ புளியங்குளம் மகாவித்தியாலயம், யா/நாவாந்துறை றோ.க. வித்தியாலயம், யா/ கொக்குவில் ஞான பண்டித வித்தியாலயம், யா/ உயரப்புலம் மெ.த.க.பாடசாலை ஆகியவற்றில் தனது ஆசிரிய பதவியினை சிறப்பாக ஆற்றி பெருந்தகையானவர்.

இவர் பருவமெய்திய காலத்தில் பெற்றோரும் மற்றோரும் சேர்ந்து புங்குடுதீவைச் சேர்ந்த அமரர்களான வேலுப்பிள்ளை தங்கரெத்தினம் ஆகியோரின் அருமைப் புத்திரனும், பிரான்ஸ் நாட்டில் வாணிபம் புரிந்தவருமான தயாளநேசன் என்னும் மணாளனை தக்க வரனாகத் தேர்ந்தெடுத்து திருமணம் செய்து வைத்தனர்.

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன் கலம் நன் மக்கட் பேறு"

என்பது வள்ளவர் வாக்கு. திருமண பந்தத்தில் இணைந்த இவர்களின் இல்லறத்தின் பயனாக நான்கு பெண் பிள்ளைகளையும் ஒரு ஆண் மகவையும் பெற்று இனிதே வாழ்ந்து வந்தனர். தனது பிள்ளைகள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்ற நோக்கில் அயராது உழைத்து மூத்த மகள் தர்சிகாவை (வைத்தியர் நியூஸ்லாண்ட்) ஓர் வைத்திய கலாநிதியாக ஆக்கியதோடு அடுத்த மகள் தக்ஷனாவை ஓர் ஆசிரியராக (மன்/வெள்ளாங்குளம் அ.த.க. பாடசாலை மன்னார்) உருவாக்கி சிறப்புக் கண்டார். அடுத்த மகள் சஞ்சனாவை உயர் கல்வியில் உயர வைத்தும், ஆண் மகன் நிரோஷன், விஸ்ணவி ஆகிய பெண் குழந்தையையும் கல்வியில் உயர்வு பெற வழிகாட்டிய உத்தமியாவார். பிள்ளைகளின் எதிர்கால வளர்ச்சியில் அக்கறை கொண்டு உழைத்ததோடு மூத்த மகளுக்குரிய சிறந்த மணாளனாக சுன்னாகம் திரு. திருமதி ஆனந்த குமாரதாஸ் தம்பதிகளின் புதல்வனான ஜெயரூபனை (பொறியியலாளர், நியூஸ்லாண்ட்) மருமகனாக்கி திருமணம் செய்து மகிழ்வுற்றார். இவர்களின் இல்லறச் சோலையில் பேர்த்தி லசாங்கியை கண் குளிரக் கண்டு கொஞ்சிக் குலாவி மகிழ்வடைந்தார். மற்றைய பிள்ளைகளின் உயர்வுகளை காண்பதற்கிடையில் காலன் இடையில் புகுந்து மீளாத் துயரில் நிறுத்தி விட்டான்.

தனது திருமண வழியில் மைத்துனர், மைத்துனிமார்களாக ஹரிதரன் (பிரான்ஸ்), இரத்தினேஸ்வரி, இரத்தினகுமார், இரத்தினேஸ்வரன், திரவியநாதன் (ஜேர்மனி), சக்திவேல் (பிரதேச சபை, ஊர்காவற்றுறை) ஆகியோருடனும் அவர்களின் உறவுகளுடனும் அன்புடனும் பண்புடனும் பழகி உறவு பாராட்டி வந்தவராவர்.

ஆசிரிய பணியில் நல்லாசிரியராக மிளிர்ந்தது மட்டுமல்லாது பாடசாலை அதிபர் பதவியை கொக்குவில் மேற்கு சி.சி.த.க பாடசாலையில் ஏற்ற காலத்தில் இருந்து கல்விச் சேவையை தன் சேவை எனக் கருதி தான் அதிபராக பணி புரியும் பாடசாலையின் வளர்ச்சிக்காக பல ஆக்க பூர்வமான திட்டங்களை செயற்படுத்துவதுடன் கல்வித் திணைக்கள அதிகாரிகளின் நன் மதிப்பையும் பெற்று அதிபர்கள் வட்டத்தில் சிறந்த அதிபராக தன்னை இனங்காட்டி கருமமே கண்ணாக உழைத்து வந்த கடமை வீராங்கனையாவார் தனக்கு இறுதிக் காலம் நெருங்கி விட்டதையே அறியாத வகையில் கடமையே கண்ணாக கருதிய உத்தமி. நோய் ஏற்பட்ட காலத்தில் கூட கொஞ்சமும் பொருட்படுத்தாமல் பாடசாலை வேலைகளில் தன்னை அர்ப்பணித்து இறுதி கட்டத்தில் தன் நோய் நாளடைவில் அதிகரிக்க யாழ் போதனா வைத்தியசாலையில் 15 நாட்கள் வரை சிகிச்சை பெற்று பயனளிக்காமல் போகவே மூத்த மகளின் வெளிநாட்டுப் பயணத்தின் தாக்கம் ஒருபுறம் வேதனையைத் தர இளைய மகளாரின் ஆசிரிய நியமனம் கிடைத்த செய்தி மகிழ்வினை ஓரளவு தந்திருந்த வேளையில் காலனின் கொடிய வேகம் தன் வேலையைக் காட்டவே 21-05-2015 அன்று 12.15 மணியளவில் திருமதி மங்களகௌரி அதிபர் அவர்கள் இவ்வுலக வாழ்கையின் இறுதி மூச்சை நிறுத்தி நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் பாத கமலங்களை சென்றடைந்தார். அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!





# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லை யிரும் பிறவிச் சூழுந்தாளை நீக்கி
அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னுந் தேன்.

நமச்சி வாய வாழ்க நாதன் தாள்வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்தும் மண்ணிறைந்தும் மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

வல்லசுரராகி முனிவராய் தேவராய்ச்
செல்லா அ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தனியாய் இயமான நாம் விமலா
பொய்யா மினஎல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் பகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தபற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட முடியா மாயா இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே

நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சகம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெருமானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தைப் பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இல்லாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்மை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



பாடசாலை நிகழ்வில் மங்கல விளக்கேற்றல்.



பரிசளிப்பு விழாவில் தலைமை தாங்குதல்.

# சகலகலாவல்லி மாலை



காப்பு

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏக உணர்விக்கும் என் அம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தின் உள்ளே
இருப்பள் இங்கு வாராது இடர்.

படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும் - துடி இடையும்
அல்லும் பகலும் அனவரத முந்துத்தாற்
கல்லுஞ் சொல்லாதோ கவி

வெண்டா மரைக் கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாத கொலோ
சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒளித்தான்பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.! (1)

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற்கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே.! (2)

அளிக்குஞ் செந்தமிழ்த் தெள்ளமுது
ஆர்ந்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ
உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.! (3)

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.! (4)

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமேன்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட் கமலத்
தஞ்சத் துவசம் உயர்ந்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.! (5)

பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதொளி செய்தநல்காய்
எழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலு மன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.! (6)

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண் நல்கா
உளங் கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.! (7)

சொல்விற் பனமும் அவதானமும்
கவி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்தடிமை கொள்வாய்
நளினாசனஞ் சேர்
செல்விக் கரிதென் றொருகாலமுஞ்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப்பேறே
சகல கலாவல்லியே.! (8)

சொற்கும் பொருட்கும் உயிராமெஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே
சகல கலாவல்லியே.! (9)

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும்விளம்பிலுன் போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.! (10)

## விபூதி மந்திரம்

பரமம் பவித்ரம் பாபா விபூதிம்
பரமம் விஸித்ரம் லீலா விபூதிம்
பரமார்த்த இஷ்டார்த்த மோட்சப் ப்ரதாதம்
பாபா விபூதிம் இதமாஸ்ரயாமி.

கருத்து :- பாபாவின் விபூதிமிகவும் பவித்திரமானது
பாபாவின் லீலை மிகவும் விசித்திரமானது
பரமாத்மாவுக்கு பிடித்தமானதும் மோட்சத்தைக்
கொடுப்பதுமான,
அந்த பாபாவின் விபூதிக்கு நமஸ்காரம்.

## காயத்திரி மந்திரம்

ஓம் பூர் புவ ஸ்வஹ
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ ந ப்ரசோதயாத்

கருத்து :- ஓ காயத்திரித்தாயே முக்காலங்களிலும் (நிகழ், எதிர், இறந்த காலங்கள்) மூவுலகங்களிலும் (பூமி, சுவர்க்கம், பாதாளம்) மூன்று குணங்களிலும் (சாத்வீக, ராஜஸ, தாமஸ) உறைபவளே எப்படி சூரியனின் ஒளி இருளை விலக்குகிறதோ, அப்படி என் புத்தியிலுள்ள அறியாமையை விலக்குவாயாக. எனது புத்தி சாந்தியும், பிரகாசமும், பூரணத்துவமும் பெறுமாறு உன்னை நான் பிரார்த்திக்கின்றேன்.

## உணவு உண்ண முதல் சொல்லும் அர்ப்பண சுலோகங்கள்

1. ஓங்காரம் மூன்று முறை
2. ஹரிர் தாதா ஹரிர் போக்தா
ஹரிர் அன்னம் பிரஜாபதி
ஹரிர் விப்ரா சரீரஸ் து
புங்தே போஜயதே ஹரி

கருத்து :- ஹரியே கொடுப்பவர், ஹரியே உண்பவர், ஹரியே உணவும் சராசங்களுக்குத் தலைவரும், ஹரியே எல்லா சரீரங்களிலும் உறைந்திருந்து உண்பவரும், உண்ணத் தூண்டுபவரும்.

3. பிரஹ்மார்ப்பணம் ப்ரஹ்மஹவிர்
ப்ரஹ்மாக்னௌ பிரஹ்மணாஹுதம்
ப்ரஹ்மைவதேனகந்தவ்யம்
ப்ரம்ம கர்ம ஸமாதினா

கருத்து :- உணவைக் கொடுக்கும் செயல் பிரம்மம், உணவும் பிரம்மம், பிரம்மமாகிய அக்கினியில் பிரம்மத்தால் உணவு அளிக்கப்படுகிறது. இந்த உணவு கொடுக்கம் செயலை பிரம்ம பாவனையோடு செய்பவர் பிரம்மமாகிறார்.

4. அஸதோ மா ஸத்கமய
தமஸோ மா ஜோதிர் கமய
ம்ருத்தியோ மா அமிர்தம்கமய

அஸதோ மா ஸத்கமய

கருத்து :- ஹே இறைவா! இந்த உலகப் பொருட்களிலிருந்து நான் சந்தோஷத்தைப் பெறுகையில் இந்த நிலையில்லாத பொருட்களை நான் மறக்குமாறு செய்து நிலையான ஆனந்தத்தை நோக்கி எனக்கு வழிகாட்டுவாயாக.

தமஸோ மா ஜோதிர் கமய

ஹே இறைவா! இவ்வுலகப் பொருட்கள் என்னைக் இவ்வொவ்வொரு பொருளும் ஆத்மா என்பதை மறைத்து நிற்கும் இருளை விலக்குவாயாக.

ம்ருத்தியோ மா அமிர்தம்கமய

ஹே இறைவா! ஒவ்வொரு பொருளிலும் அந்தர்யாமியாக இருக்கும் ஆத்மப் பிரகாசத்தை பார்ப்பதனால் உண்டாகும் பரமானந்தத்தை உனதருளால் எனக்குத் தந்தாசீர்வதிப்பாயாக.



# பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா
# அஷ்டோத்தர சத நாமா வளி

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | ஓம் | ஸ்ரீ | சத்ய சாயி பாபாய | நம |
| 02. | ஓம் | ஸ்ரீ | சத்ய ஸ்வரூபாய | நம |
| 03. | ஓம் | ஸ்ரீ | சத்ய தர்ம பராயணாய | நம |
| 04. | ஓம் | ஸ்ரீ | வரதாய | நம |
| 05. | ஓம் | ஸ்ரீ | சத் புருஷாய | நம |
| 06. | ஓம் | ஸ்ரீ | சத்ய குணாத்மனே | நம |
| 07. | ஓம் | ஸ்ரீ | சாது வர்த்தனாய | நம |
| 08. | ஓம் | ஸ்ரீ | சாது ஜன போஷணாய | நம |
| 09. | ஓம் | ஸ்ரீ | சர்வக் ஞாய | நம |
| 10. | ஓம் | ஸ்ரீ | சர்வ ஜன ப்ரியாய | நம |
| 11. | ஓம் | ஸ்ரீ | சர்வ சக்தி மூர்த்தயே | நம |
| 12. | ஓம் | ஸ்ரீ | சர்வேசாய | நம |
| 13. | ஓம் | ஸ்ரீ | சர்வ சங்க பரித்யாகினே | நம |
| 14. | ஓம் | ஸ்ரீ | சர்வாந்தர் யாமினே | நம |
| 15. | ஓம் | ஸ்ரீ | மஹிமாத்னே | நம |
| 16. | ஓம் | ஸ்ரீ | மஹேஸ்வர ஸ்வரூபாய | நம |
| 17. | ஓம் | ஸ்ரீ | பர்த்தி கிராமோத் பவாய | நம |
| 18. | ஓம் | ஸ்ரீ | பர்த்தி க்ஷேத்ர நிவாசினே | நம |
| 19. | ஓம் | ஸ்ரீ | யசகாய ஷிர்டி வாசினே | நம |
| 20. | ஓம் | ஸ்ரீ | ஜோடி ஆதிபல்லி சோமப்பாய | நம |
| 21. | ஓம் | ஸ்ரீ | பரத்வாஜ ரிஷி கோத்ராய | நம |
| 22. | ஓம் | ஸ்ரீ | பக்த வத்சலாய | நம |
| 23. | ஓம் | ஸ்ரீ | அபாந்தராத்மனே | நம |
| 24. | ஓம் | ஸ்ரீ | அவதார மூர்த்தியே | நம |
| 25. | ஓம் | ஸ்ரீ | சர்வ பய நிவாரிணே | நம |
| 26. | ஓம் | ஸ்ரீ | ஆபஸ்தம்ப சூத்சாய | நம |
| 27. | ஓம் | ஸ்ரீ | அபய ப்ரதாய | நம |
| 28. | ஓம் | ஸ்ரீ | ரத்னாகர வம்சோத்பவாய | நம |
| 29. | ஓம் | ஸ்ரீ | ஷிர்டி சாயி அபேத சக்தி அவதராய | நம |
| 30. | ஓம் | ஸ்ரீ | சங்கராய | நம |
| 31. | ஓம் | ஸ்ரீ | ஷிர்டி சாயி மூர்த்தியே | நம |
| 32. | ஓம் | ஸ்ரீ | துவாரகா மாயி வாஜினே | நம |
| 33. | ஓம் | ஸ்ரீ | சித்ராவதி தடபுட்டபர்த்தி விஹாரினே | நம |
| 34. | ஓம் | ஸ்ரீ | சக்தி ப்ரதாய | நம |

| | | | | |
|---|---|---|---|---|
| 35. | ஓம் | ஸ்ரீ | சரணாகத த்ராணாய | நம |
| 36. | ஓம் | ஸ்ரீ | ஆனந்தாய | நம |
| 37. | ஓம் | ஸ்ரீ | ஆனந்த தாய | நம |
| 38. | ஓம் | ஸ்ரீ | ஆர்த்த த்ராண பராயணாய | நம |
| 39. | ஓம் | ஸ்ரீ | அனாத நாதாய | நம |
| 40. | ஓம் | ஸ்ரீ | அஸஹாய சகயாய | நம |
| 41. | ஓம் | ஸ்ரீ | லோக பாந்தவாய | நம |
| 42. | ஓம் | ஸ்ரீ | லோக ரக்ஷா பாராயணாய | நம |
| 43. | ஓம் | ஸ்ரீ | லோக நாதாய | நம |
| 44. | ஓம் | ஸ்ரீ | தின ஜன போஷணாய | நம |
| 45. | ஓம் | ஸ்ரீ | மூர்த்தி த்ரய ஸ்வரூபாய | நம |
| 46. | ஓம் | ஸ்ரீ | முக்தி ப்ரதாய | நம |
| 47. | ஓம் | ஸ்ரீ | கலுஷ விதூ ராய | நம |
| 48. | ஓம் | ஸ்ரீ | கருணாகராய | நம |
| 49. | ஓம் | ஸ்ரீ | சர்வா தாராய | நம |
| 50. | ஓம் | ஸ்ரீ | சர்வ ஹ்ருத வாசினே | நம |
| 51. | ஓம் | ஸ்ரீ | புண்ய பலப்ரதாய | நம |
| 52. | ஓம் | ஸ்ரீ | சர்வபாப க்ஷயகராய | நம |
| 53. | ஓம் | ஸ்ரீ | சர்வ ரோக நிவாரிணே | நம |
| 54. | ஓம் | ஸ்ரீ | சர்வ பாத ஹராய | நம |
| 55. | ஓம் | ஸ்ரீ | அனந்துநுத கர்த்ருணெ | நம |
| 56. | ஓம் | ஸ்ரீ | ஆதி பருஷாய | நம |
| 57. | ஓம் | ஸ்ரீ | ஆதி சக்தய | நம |
| 58. | ஓம் | ஸ்ரீ | அபரூப சக்தினே | நம |
| 59. | ஓம் | ஸ்ரீ | அவ்யக்த ரூபிணே | நம |
| 60. | ஓம் | ஸ்ரீ | காம க்ரோத த்வம்ஸினே | நம |
| 61. | ஓம் | ஸ்ரீ | கனகாம்பர தாரிணே | நம |
| 62. | ஓம் | ஸ்ரீ | அற்புத சர்யாய | நம |
| 63. | ஓம் | ஸ்ரீ | ஆபத் பாந்தவாய | நம |
| 64. | ஓம் | ஸ்ரீ | ப்ரேமாத்மனே | நம |
| 65. | ஓம் | ஸ்ரீ | ப்ரேம மூர்த்தயே | நம |
| 66. | ஓம் | ஸ்ரீ | ப்ரேம ப்ரதாய | நம |
| 67. | ஓம் | ஸ்ரீ | ப்ரியாய | நம |
| 68. | ஓம் | ஸ்ரீ | பக்த ப்ரியாய | நம |
| 69. | ஓம் | ஸ்ரீ | பக்த மந்தாராய | நம |
| 70. | ஓம் | ஸ்ரீ | பக்த ஜன ஹ்ருதய விஹாராய | நம |
| 71. | ஓம் | ஸ்ரீ | பக்த ஜன ஹ்ருதயாலயாய | நம |

| | | | | |
|---|---|---|---|---|
| 72. | ஓம் | ஸ்ரீ | பக்த பராதீனாய | நம |
| 73. | ஓம் | ஸ்ரீ | பக்தி ஞான ப்ரதீபாய | நம |
| 74. | ஓம் | ஸ்ரீ | பக்தி ஞான ப்ரதாய | நம |
| 75. | ஓம் | ஸ்ரீ | சுக்ஞான மார்க்க தர்சகாய | நம |
| 76. | ஓம் | ஸ்ரீ | ஞான சித்தி தாய | நம |
| 77. | ஓம் | ஸ்ரீ | கீதா போதகாய | நம |
| 78. | ஓம் | ஸ்ரீ | ஞான சித்தி தாய | நம |
| 79. | ஓம் | ஸ்ரீ | சுந்தர ரூபாய | நம |
| 80. | ஓம் | ஸ்ரீ | புண்ய புருஷாய | நம |
| 81. | ஓம் | ஸ்ரீ | பலப்ரதாய | நம |
| 82. | ஓம் | ஸ்ரீ | புருஷோத்தமாய | நம |
| 83. | ஓம் | ஸ்ரீ | புராண புருஷாய | நம |
| 84. | ஓம் | ஸ்ரீ | அதீதாய | நம |
| 85. | ஓம் | ஸ்ரீ | காலா தீதாய | நம |
| 86. | ஓம் | ஸ்ரீ | சித்தி ரூபாய | நம |
| 87. | ஓம் | ஸ்ரீ | சித்த சங்கல்பாய | நம |
| 88. | ஓம் | ஸ்ரீ | ஆரோக்ய ப்ரதாய | நம |
| 89. | ஓம் | ஸ்ரீ | அன்ன வஸ்திர தாய | நம |
| 90. | ஓம் | ஸ்ரீ | சம்சார துக்க ஷயகராய | நம |
| 91. | ஓம் | ஸ்ரீ | சர்வாபீஷ்ட ப்ரதாய | நம |
| 92. | ஓம் | ஸ்ரீ | கல்யாண குணாய | நம |
| 93. | ஓம் | ஸ்ரீ | கர்ம த்வம்சினே | நம |
| 94. | ஓம் | ஸ்ரீ | சாது மானஸ சோபிதாய | நம |
| 95. | ஓம் | ஸ்ரீ | சர்வ மத சம்மதாய | நம |
| 96. | ஓம் | ஸ்ரீ | சாது மானஸ பரிசோதகாய | நம |
| 97. | ஓம் | ஸ்ரீ | சாதகானுக்ரஹ வடவ்ருஷ ப்ரதிஷ்டாப காய | நம |
| 98. | ஓம் | ஸ்ரீ | சகல சம்சய ஹராய | நம |
| 99. | ஓம் | ஸ்ரீ | சகல த்தவ போதகாய | நம |
| 100. | ஓம் | ஸ்ரீ | யோகீஸ்வராய | நம |
| 101. | ஓம் | ஸ்ரீ | யோகீந்த்ர வந்தி தாய | நம |
| 102. | ஓம் | ஸ்ரீ | சர்வ மங்கள கராய | நம |
| 103. | ஓம் | ஸ்ரீ | சர்வ சித்தி ப்ரதாய | நம |
| 104. | ஓம் | ஸ்ரீ | ஆபன் நிவாரிணே | நம |
| 105. | ஓம் | ஸ்ரீ | ஆர்த்தி ஹராய | நம |
| 106. | ஓம் | ஸ்ரீ | சாந்த மூர்த்தயே | நம |
| 107. | ஓம் | ஸ்ரீ | சுலப ப்ரசன்னாய | நம |
| 108. | ஓம் | ஸ்ரீ | பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாய | நம |

# அன்பு வழிப் பாடல்கள்

அன்பான உள்ளங்கள் நாம் இங்கு கூடி
ஆனந்தமாக ஆண்டவனைப் போற்றி
பண்ணோடு பல பல பாடல்கள் பாடி
பரமனின் பாதம் பணிந்திடுவோமே.

விடியற் பொழுதில் விரைவாக எழுந்து
வித்தையை விரும்பிக் கற்றிடுவோமே
அன்றைய பொழுது அன்பாகப் புலர
அன்றாடம் ஆண்டவனை மன்றாடுவோமே.

காலையில் கதிரவன் எழு முன்னர் எழுந்து
காலைக் கடனைக் கருத்தோடு ஆற்றி
கடி மலர் எடுத்து மாலை தொடுத்து
கடவுளை தினசரி பூசிப்போமே.

அன்பான முறையில் சீராட்டி வளர்த்த
அன்னையையும் அன்புத் தந்தையையும்
அதிகாலைப் பொழுதில் அவர் பாதம் பணிந்து
ஆனந்தப் பெருவாழ்வு பெற்றிடுவோமே.

அன்னையின் அறிவுரையை அன்பாகக் கேட்போம்
தந்தையின் சொல்லைத் தட்டாமல் நடப்போம்
தம்பி தங்கையோடு தர்க்கங்கள் புரியாது
தரணியில் அன்பாக வாழ்ந்திடுவோமே.

கற்பித்தல் கற்றல் நிகழ்த்துகையிலே
கட்டுப்பாட்டுடன் வகுப்பறையில் நாம்
கல்வியை ஊட்டிடும் அறிவுக் கண் ஆசானை
கடவுளாய்ப் போற்றி மதித்திடுவோமே.

பட்டங்கள் பெற்று பட்டதாரி ஆனாலும்
பண்பில்லையானால் அதில் பயன் இல்லை
அழகுற அனைத்தும் அமைந்திருந்தாலும்
அன்பில்லையானால் அதில் பயனில்லை.

இல்லம் சாடி வரும் இனிய உறவுகளை
இன்முகத்தோடு வரவேற்றிடுவோம்
சந்தோஷமாக சாந்தியைப் பெற்றிட
சத்திய வார்த்தையை சம்பாஷிப்போமே.

சத்தியம் தர்மம் சாந்தி பிரேமை
அகிம்சாவை உள்ளத்தில் உதயம் ஆக்கி
அழுக்காறு அவா வெகுளி இன்னா சொல்
இழுக்கான இவற்றை அகற்றிடுவோமே.

பெரியோரின் வார்த்தையை பேணி நடந்து
பெற்றோர்க்குப் பெருமையைத் தேடிக் கொடுப்போமே
சாலையில் நின்று சண்டைகள் செய்யாது
சத்சங்கத்தில் சங்கமம் ஆவோம்

ஆனந்தமாகவே காலையும் மாலையும்
ஆர்வத்தோடு நாங்கள் பஜனைகள் செய்து
ஆன்மாவை ஆனந்தப் பெருவாழ்வு பெறவைக்க
அனுதினம் சாதனை செய்திடுவோமே.

நாள் தோறும் நாங்கள் விட்டதவறென்ன
நம்மை நாமே உயர்த்த நல்ல வழி என்ன
நல்லவராய் நாங்கள் நாளை உருவாக
நாள் தோறும் குடும்பமாய் ஆலோசிப்போமே.

தம் மக்கள் விடுகின்ற தவறான பிழைகளை
தந்தை தாயார் அன்பாய்த் திருத்திட வேண்டும்
தப்பான வார்த்தைகளை நாங்கள் கூறாது
தயைவாக எடுத்து இயம்பிட வேண்டும்.

சாந்தி சமாதானம் நம் நாட்டில் நிலவ
சாதி மத பேத சர்ச்சைகள் ஒழிய
அதர்ம வழிகள் அடியோடு சாய
அகிம்சா வழியில் நாம் நடப்போமே.

ஊர் மக்கள் நாமெல்லாம் ஒன்றாகக் கூடி
உன்னத பாதையில் வழி நடப்போமே
அழியாத வஸ்துவாம் ஆன்மாவை அறிந்து
அன்பான வாழ்வு வாழ்ந்திடுவோமே.

அதிகாலை தொடங்கி அந்தி மாலை வரையும்
ஆற்றுப்படுத்துகின்ற ஆண்டவருக்கு
அநுதினம் நாங்கள் நன்றியை நல்கிட
நாள்தோறும் இரவில் நமஸ்கரிப்போமே.



# நரசிம்ஹ மேத்தா இயற்றிய
# வைஷ்ணவ ஜனதோ
## (மஹாத்மா காந்தி மிகவும் விரும்பிய கீதம்)

மொழி பெயர்ப்பு :- சாயி ஞானசேகரம் ஐயா

1. அவனையே வைஷ்ணவன் என நான் சொல்வேன்
எவன் பிறர் துன்பங் கண்டிரங்குகின்றானோ - அவனை
எல்லா மாந்தர்க்கும் உதவுவானாயினும்
எனது "நான்" என்பது அவனுக்கில்லையே - அவனை

2. எல்லாரிடத்திலும் ஈசனைக் காண்பான்
வணங்குவான் எவரையும் ஏசான் இகழான்
அவனுடைய மனம் வாக்(கு) காயம் பரிசுத்தம்
பெற்ற அவன் அன்னை பேறு பெற்றவளே - அவனை

3. சமத்ருஷ்டியுடன் எதனையும் நோக்குவான்
பிறமாதர் தம்மைத் தாயாய் காண்பான்
எதற்கும் எப்பவும் பொய் சொல்லானவன்
எவர் பொருளிலும் அவன் இச்சை கொள்ளானே - அவனை

4. மோகமும் மாயையும் அவனை வந்தணுகா(து)
திடவைராக்கியம், வேரூன்றி விட்டது
ராமநாதம் அவன் பெயருடன்
புனித தீர்த்தங்களோ அவனிடத் தொடுக்கும் - அவனை

5. வாஞ்சை ஏமாற்றம் அவனிடத்தேது
காமமும் குரோதமும் அவனிடத் தொழிந்தன
நாசி பகத் சொல்லிது - அவனைத் தரிசித்தவர்
கர்மம் நீங்கி விடு பெற்றவரே - அவனை

# ஸ்ரீ சாயி பாபா விரத முறைகள்

1. இந்த விரதத்தை ஆண், பெண், குழந்தைகள் யார் வேண்டுமானாலும் செய்யலாம்.

2. இந்த விரதத்தை ஜாதி மத பேதமின்றி எந்த சார்பினரும் செய்யலாம்.

3. இந்த விரதம் அற்புத பலன்களை தரவல்லது. 9 வியாழக் கிழமைகள் விதிமுறைப்படி விரதம் இருந்தால் நிச்சயம் விரும்பிய எண்ணங்கள் நிறைவேறும்.

4. விரத்தை எந்த ஒரு வியாழக்கிழமையானாலும், சாயி நாமத்தை எண்ணி ஆரம்பிக்கலாம். எந்த காரியத்திற்காக ஆரம்பிக்கின்றோமோ, அதை தூய மனதில் சாயிபாபாவை எண்ணிப் பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும்.

5. காலை அல்லது மாலையில் சாயி பாபாவின் போட்டோவிற்கு பூஜை செய்ய வேண்டும். ஒரு தூய நீரால், துணியால் துடைத்து, சந்தனம் குங்குமம் வைத்து திலகம் இட வேண்டும். மஞ்சள் நிற மலர்கள் அல்லது மாலை அணிவிக்கவும். ஊதுபத்தியும், தீபமும் ஏற்றி சாயி விரதக் கதையைப் படிக்கவும். சாயி பாபாவை ஸ்மரணை செய்யவும். நைவேத்தியம் வைத்து (பழங்கள், இனிப்புக்கள், கற்கண்டு எதுவானாலும்) பிரசாதத்தை விநியோகிக்கவும்.

6. இந்த விரதத்தை பழ, திரவிய ஆகாரங்கள் (பால், டீ, காபி, பழங்கள், இனிப்புக்கள்) உட்கொண்டு செய்யவும். அப்படி நாள் முழுவதும் செய்ய முடியாதவர்கள் ஏதாவது ஒரு வேளை (மதியமோ, இரவோ) உணவு அருந்தலாம். நாள் முழுவதும் வெறும் வயிற்றோடு பட்டினியாக இந்த விரதம் செய்யவே கூடாது.

7. வியாழக்கிழமைகளும் முடிந்தால் சாயி பாபா கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்யவும். முடியாதவர்கள் (கோயில் அருகில் இல்லை என்றால்) வீட்டிலேயே சாயி பாபாவின் பூஜையை பக்தி சிரத்தையுடன் செய்யவும்.

8. வெளியூர் செல்வதனாலும் இந்த விரதம் கடைப்பிடிக்கலாம்.

9. விரதத்தின் 9 வாரங்கள் பெண்களுக்கு மாத விலக்கு அல்லது இன்ன பிற காரணங்களாலே விரதம் செய்ய முடியவில்லை என்றால் அந்த வியாழக்கிழமையை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் இன்னொரு வியாழக்கிழமை விரதம் இருந்து 9 வியாழக்கிழமைகள் நிறைவு செய்யவும்.

## விரத நிறைவு [உத்யாபனம்] விதிமுறைகள்

1. 9வது வியாழக்கிழமை விரதத்தை நிறைவு செய்ய வேண்டும். அன்று 5 எழைகளுக்கு உணவு அளிக்க வேண்டும். (உணவு தங்களால் இயன்றது) நேராக உணவு அளிக்க முடியாதவர்கள் யார் மூலமாகவும் பணமாகவோ, உணவுப் பொருளோ கொடுத்து உணவு அளிக்க ஏற்பாடு செய்யவும்.

2. சாயிபாபாவின் மஹிமை மற்றும் விரதத்தை பரப்புவதற்காக நம்முடைய வீட்டிற்கு அருகில் வசிப்பவர், சொந்த பந்தம், தெரிந்தவர் என்று இந்த விரத புத்தகங்களை 5,11,21 என்று தங்களால் இயன்ற அளவு விநியோகம் செய்யவும்.

3. 9வது வியாழக்கிழமை விநியோகிக்கும் புத்தகங்களை அன்று பூஜையில் வைத்து பிறகு விநியோகிக்கவும். இதனால் புத்தகத்தை பெறும் பக்தரின் விருப்பங்களும் ஈடேறும். மேற்கூறிய விதிமுறைகளின் படி விரதமும் விரத நிறைவும் செய்தால் நிச்சயமாக எண்ணிய காரியம் நிறைவேறும். இது சாயி பக்தர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

# சாயி ஸ்மரணை

வாரும் சாயி, வாரும் சாயி !
வாரும் சாயி, வாரும் சாயி !
பக்தர் உம்மை அழைக்கின்றோம் !
விருப்பம் ஈடேற வேண்டும் !
பக்தி பல முறை வேண்டும் !
வாரும் சாயி, வாரும் சாயி !
வாரும் சாயி, வாரும் சாயி !

துக்கம் போக்க வாரும் சாயி
ஆனந்தம் அளிள்ள வாரும் சாயி !
சேய் உமை அழைத்தேன் சாயி !
தாய் மனதோடு இளகுவாய் சாயி !
வாரும் சாயி, வாரும் சாயி !

கீர்த்தனம் சாயி, பூஜை சாயி !
வாழ்வும் சாயி, வளமும் சாயி !
ஆனந்தம் சாயி, செல்வம் சாயி !
அற்புதம் சாயி, அபயம் சாயி !
வாரும் சாயி, வாரும் சாயி !

திருப்பதி சாயி முக்தி சாயி !
பூமி சாயி ஆகாயம் சாயி !
சாந்தி சாயி ஓம் சாயி !
வாரும் சாயி, வாரும் சாயி !
வாரும் சாயி, வாரும் சாயி !



ஷர்டி வாசி எங்கள் சாயி !
பக்தரின் இனிய அன்பர் சாயி!
கருணைக் கடலே எங்கள் சாயி !
அருள் பார்வை பாரும் சாயி !
வாரும் சாயி, வாரும் சாயி !

கிழக்கும் சாயி மேற்கும் சாயி !
வடக்கும் சாயி, தெற்கும் சாயி !
எத் திசையில் நீ இருந்தாலும் சாயி !
வாரும் சாயி, வாரும் சாயி !

ஹிந்து சாயி முஸ்லீம் சாயி !
ஜீவன் சாயி யாத்திரை சாயி !
யேசு சாயி குருநானக் சாயி !
வாரும் வாயி, வாரும் சாயி !

தர்மம் சாயி ! கர்மம் சாயி !
தமியானம் சாயி ! தானம் சாயி !
தூணிலும் சாயி ! துரும்பிலும் சாயி !
வாரும் வாயி, வாரும் சாயி !

சத்யம் சாயி, சிவம் சாயி !
சுந்தரம் சாயி ஈஸ்வரன் சாயி !
இரக்கம் சாயி எளியவர் சாயி !
அன்பு சாயி அமைதி சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி !
வாரும் சாயி, வாரும் சாயி !

சக்தி சாயி பக்தி சாயி !
சிவன் சாயி விஷ்ணு சாயி !
ப்ரஹ்மா சாயி பஞ்சபூதம் சாயி !
வாரும் சாயி, வாரும் சாயி !
வாரும் சாயி, வாரும் சாயி !



# ஸ்ரீ சாயி பாபாவின் உறுதி மொழிகள் (11 வாக்குகள்)

1. ஷீர்டியில் காலடி படும் பக்தனுக்கு வரும் ஆபத்து விலகி விடும்.
2. என் சமாதியின் படி ஏறுபவனின் அனைத்து துக்கங்களும் போக்குவேன்.
3. இவ்வுலகை விட்டு என் பூதவுடல் மறைந்தாலும் பக்தன் அழைத்தால் ஓடி வருவேன்.
4. திட பக்தி, நம்பிக்கை, விசுவாசத்துடன் யாசிப்பவன் ஆசையை என் சமாதி பூர்த்தி செய்யும்.
5. இன்னம் நான் உயிருடன் இருக்கிறேன் என்று எப்பொழுதும் உணர்ந்து இதனை சத்தியமென்றறிருந்து அனுபவம் பெறுவீர்.
6. என்னை சரணடைந்தும் வெறும் கையோடு திரும்பினான் என்று எந்த பக்தனாவது இருந்தால் அவனை எனக்கு காண்பியுங்கள்.
7. பக்தா என்னை எப்படிப்பட்ட பக்தியுடன் உணருகிறானோ, அப்படிப்பட்ட அனுபவங்கள் அவனுக்குத் தருவேன்.
8. எப்பொழுதும் உங்கள் சுமைகள் நான் சுமக்கிறேன். என் வாக்குப் பொய்யாவதில்லை.
9. நீங்கள் கேட்பது எல்லாம் நான் கொடுப்பேன். என் உதவியையும், அருளையும் அள்ளித் தர நான் காத்திருக்கிறேன்.
10. பக்தியுடன் என் மொழிகளை மனதில் ஏற்றுபவனுக்கு நான் கடன் பட்டவன் ஆவேன்.
11. என் திருவடிகளை அடைந்த பக்தன் பெரும் பாக்கியவான் ஆவான்.



பாடசாலை நிகழ்வில் உரையாற்றல்.



விளையாட்டு நிகழ்வில் கொடியேற்றல்.

# மனிதன் மனிதனாய் வாழ......!


- நானே பெரியவன் நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள் (Ego)
- சில நேரங்களில் சில சங்கடங்களை சகித்துத்தான் ஆக வேண்டும் என்று உணருங்கள். (Tolerance)
- மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப் படாதீர்கள். ( Superiority Complex)
- நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று கடைசி வரை வாதாடாதீர்கள். (Adament Arguement)
- உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல் கொஞ்சம் தளர்த் திக் கொள்ளுங்கள். (Flexibility)
- மற்றவர் கருத்துக்களை செயல்களை நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள். (Mis Understanding)
- அளவுக்கதிகமாய் தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள். (Over Expectation)
- குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள். (Narrow Mindness)
- அர்த்தம் இல்லாமலும் தேவை இல்லாமலும் பின் விளைவு அறியாமலும் பேசிக் கொண்டிருப்பதை விட்டு விடுங்கள். (Loose Talks)
- மற்றவர்களுக்கு உரிய மரியாதையைக் காட்டவும் இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள். (Courtesy)
- உண்மை எது பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள்.
- அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் விட்டுப் பேசுங்கள்
- எப்போதும் எல்லோரிடத்திலும் அன்பு காட்டுங்கள்
- பிரச்சனைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவக்க முன் வாருங்கள்.
- கேள்விப்படுகிற எல்லா. விஷயங்களையும் நம்பி விடாதீர்கள். அற்ப விஷயங்களை பெரிது படுத்தாதீர்கள்.

# கொக்குவில் மேற்கு சி.சி.த.க பாடசாலையின் இரங்கற் செய்தி

"நெரு நல் உளனொருவன் இன்றில்லை எனும்
பெருமை உடைத்து இவ்வுலகு"

என்பது வள்ளுவர் வாக்கு. நேற்று இருந்தவர் இன்றில்லை என்பதே இவ் வுலகின் நியதி. அந்த வகையில் எமது பாடசாலையின் அதிபராக இருந்த அமரர் திருமதி. மங்களகௌரி தயாளநேசன் அவர்கள் மிடுக்கான தோற்றமும், ஆளுமையும் நிறைந்த ஒருவராவர். பாடசாலையின் வளர்ச்சிக்கு பல்வேறு வழிகளிலும் உறுதுணையாக இருந்தவர். நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பொழுதும் கூட திணைக்களங்களிலிருந்து கடிதம் வந்ததா? என்ன செய்கிறீர்கள் என்று கேட்டபடி பாடசாலை சிந்தனையாகவே இருந்தார். இவருடைய இறப்பு ஈடு செய்ய முடியாத ஒன்று. அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நயினை நாகபூசணி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கி. இளங்கோவன்**
**ஆசிரியர்**
**கொக்குவில் மேற்கு சி.சி.த.க பாடசாலை**



# கோட்டக் கல்விப் பணிப்பாளரின் கண்ணீரக் காணிக்கை

வையத்துள் வாழ் வாங்கு வாழ்ந்து, வானுறையும் தெய்வத்துள் கலந்து விட்ட திருமதி. மங்களகௌரி தயாளநேசன் அவர்கள் அமரத்துவம் அடைந்து விட்டார் என்பதை எண்ணும் போது நெஞ்சம் கனக்கிறது. தோற்றமும், மறைவும் தொல்லியல் இயல்பு என்று தேறும் பண்பே உலகை வாழ வைக்கின்றது என்னும் உண்மையினை மனம் உணர்ந்தாலும் அதியருடன் பழகிய நாட்கள் என் மனதில் மறக்க முடியாத ஒன்றாய் பதிந்து விடுகின்றது.

அமரர் திருமதி. மங்களகௌரி அவர்கள் நயினை மண்ணில் பிறந்து அம் மண்ணில் ஆரம்ப இடை நிலைக் கல்வியைப் பயின்று உயர் கல்வியை யா/கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்தில் நிறைவு செய்திருந்தார். தமது ஆசிரியப் பணியை பிறந்த மண்ணில் ஆரம்பித்து பத்துப் பாடசாலைகளில் விஞ்ஞான ஆசிரியராக பணியாற்றியதை அறிவேன். அவர் விஞ்ஞான ஆசிரியராக பணியாற்றிய காலத்தில் மாணவரின் விருப்பத்திற்கு உரியவராகவும் மாணவர்களின் மனங்களை வென்றவராகவும் உயர்ந்த பெறுபேறுகளை ஈட்டியதாக செயற்பட்டவராக அவருடன் பணியாற்றிய ஆசிரியர் மூலமாக அறிந்து கொண்டேன்.

திருமதி. மங்களகௌரி தயாளநேசன் அவர்கள் 2008ம் ஆண்டு முதல் யா/கொக்குவில் மேற்கு சி.சி.த.க பாடசாலையின் அதிபர் பொறுப்பை ஏற்று திறம்பட சேவையாற்றி வந்தார். நான் அவருடைய பாடசாலையை தரிசிக்கச் செல்லும் போது இன் முகத்துடன் வரவேற்று அனுசரிப்பார். தனது குடும்பம், கணவரின் நிலைமைகளை எல்லாம் மனம் விட்டுப் பேசுவார். தான் வெகு விரைவில் ஓய்வு பெறப் போகின்றேன் எல்லாவற்றையும் சீர்படுத்தி தரவேண்டும் என்றெல்லாம் கூறுவார். நானும் தேவையான ஆலோசனைகளை எல்லாம் வழங்குவேன்.


கோட்டக் கூட்டங்களில் ஒரு குழுவாக உரிய நேரத்திற்கு முன்பே வருகை தருவார். தமது பாடசாலைக்கு தேவையானவற்றை தாமாக சக அதிபரிடமோ பெற்று செல்வதை நான் அவதானித்திருந்தேன். சிறிய பாடசாலையாக இருந்தாலும் போட்டிகளில் பங்கு பற்றுவதிலும் விளையாட்டுப் போட்டியை நடாத்தி சமூக உறவைப் பேணுவதிலும் அக்கறையுடன் செயற்படுவார்.

எல்லோருடனும் அன்பு, இரக்கம், நட்பு, பரோபகார சிந்தனையுடன் பழகுவதைப் பார்த்திருக்கிறேன். தன்னை விட தன் குடும்பத்தினரை கவனிப்பதில் அதீத அக்கறையுடன் செயற்பட்டதால் தன்னைக் கவனிப்பதில் அக்கறையற்று இருந்தார். இதுவே அவருக்கு தலைவிதியாக மாறியது. அவர் கல்விச் சமூகத்திற்கு ஆற்றிய சேவைகள் காலத்தால் அழியாதவை.

"அன்னை யாவினும் புண்ணியங்கோடி
ஆங்கோடு ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

எனும் பாரதியின் வாக்குக்கு இணங்க சேவையாற்றி மறைந்த எம் அதிபரின் ஆத்ம சாந்தி அடைய பிரார்த்திப்பதோடு அவர் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு மனம் நெகிழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அ. அகிலதாஸ்**
**கோட்டக் கல்விப் பணிப்பாளர்,**
**நல்லூர்.**



# மணிபல்லவம் பெற்றெடுத்த மாணிக்கம்

வைகாசி மாதம் (21-05-2015) வியாழக்கிழமை விடியற் காலை எங்கள் வீட்டு ரெலிபோன் மணி அலறியது. வழக்கத்துக்கு மாறான நேரம். மனதில் ஒரு வித பயத்துடன் ரெலிபோன் அழைப்பினை தொடர்ந்தேன். அழைப்பு உண்மையானதா? அந்த அழைப்பில் கிடைத்த செய்தியை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எம் இதயத்தை சுக்கு நூறாக்கி விட்டது. எனது மாமாவின் மகள் "பேபி" இறைவனடி சேர்ந்து விட்டார் என்ற துக்ககரமான செய்தியே அது. எதிர்பார்த்திராத செய்தி. கண்களில் கண்ணீர் சொரிகின்றது செய்வதறியாது நிலை தடுமாறியது.

நல்லவர்களை தந்த, தருகின்ற புண்ணி பூமியாக நயினாதீவு விளங்கி வருகின்றது. பொன்னான புண்ணிய பூமியில் நல்லவர்கள் பலர் வாழ்ந்திருக்கிறார்கள். இன்றும் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். நாட்டுக்கு உழைக்கும் நனி சிறந்த நல்லவர்கள் மத்தியில் மணிபல்லவம் பெற்றெடுத்த மாணிக்கமே திருமதி (அமரர்) மங்களகௌரி தயாளநேசன் அவர்கள்.

இவ்வுலகில் மக்கள் எப்படியும் வாழலாம் என்றில்லாது இப்படித்தான் வாழ வேண்டும் என்று வாழ்ந்து காட்டியவர்களில் ஒருவாராக திகழ்கின்றார். தனது கடமைகளை சரிவர நிறைவேற்றி தனது குழந்தைகளின் உயர்வுக்காக உழைத்து கல்விப் பணியினை செவ்வனவே நிறைவேற்றி கடமையே கண்ணாகக் கொண்ட கடமை வீராங்கனையாகவும், பணிகள் பல செய்த சிறப்பினை உடையவர் தான் அமரர் மங்களகௌரி தயாளநேசன் அவர்கள்.

இன்பம், துன்பம், பிறப்பு, இறப்பு, உயர்வு, தாழ்வு யாவையும் காலச் சக்கரத்தின் நியதிப் படி இயங்குகின்றன. மனிதர் நாம் மண்ணில பிறந்ததன் நோக்கம் மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்கேயாம். அவ்வாறு வாழ் வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர். இதனையே வள்ளவர்

> "வையத்துள் வாழ் வாங்கு வாழ்பவர் - வானுறையும்
> தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற வள்ளுவர் வாக்குக்கு அமைய வாழ்ந்து காட்டியவர். வாழ்வாங்கு வாழ்ந்து எல்லோர் நெஞ்சங்களிலும் தனக்கென தனியானதொரு இடத்தை ஏற்படுத்தி கொண்டவர். தான் எடுத்துக் கொண்ட பணிகளை சிறப்பாக ஆற்றிய நல்லதிபர். தாம் கொண்ட கொள்கையில் தளராத உறுதியுடனும், சேவை மனப்பான்மையுடனும், மற்றவர்களை மதிக்கும் பண்பிலும், தாய்மை உள்ளத்துடனும், தாய்த் திருநாட்டின் மீது அளவு கடந்த பற்றும், இறை பக்தியும், பண்பாடுகளும் கொண்ட உத்தமி எனலாம்.

" தற்காத்து தற்கொண்டார் பேணி தகை சான்ற
சொற்காத்து சோர்வினாள் பெண் "

என்ற வள்ளுவர் வாய் மொழிக்கு இலக்கணமாக தன்னையும் காத்து, தன் கணவனையும் காத்து தன் கடமையில் தவறாமல் நடப்பவளே சிறந்த பெண்ணானவள். இதற்கு உரித்தானவராக கணவனின் கடமைகளை சிறப்பாகச் செய்து தனது அதிபர் கடமை பொறுப்புக்களிலும் கடமை தவறாது பணியாற்றி அதிபர் திலகமாக திகழ்ந்துள்ளார். தனது இல்வாழ்க்கை பண்புகளுக்கு ஏற்ப விருந்தோம்பல் பண்புகளை தன்னகத்தே கொண்டு உறவுகளை மதித்து உறவு பாராட்டி இல் வாழ்வின் பயனாக நல் முத்துக்களாக ஐந்து பிள்ளைகளைப் பெற்று கொண்டதுடன் அவர்களின் கல்வி கேள்விகளில் உயர்வுகளை காண வேண்டி உழைத்து மூத்த மகளை ஓர் வைத்திய கலாநிதியாகவும் மற்றைய மகளை ஓர் ஆசிரியையாகவும் கண்டு மற்றறைய பிள்ளைகளின் கல்விச் சிறப்புகளுக்கு வழிகாட்டியாக இருந்து அவர்கள் நலன்களில் அக்கறை கொண்டு வாழ்ந்தவர் தான் திருமதி மங்களகௌரி அவர்கள். அவர்களின் சிறப்புக்களைக் கண்டு கொள்ளாமலே காலன் வஞ்சித்து விட்டான். மைத்துனி மங்களகௌரி அவர்களின் பிரிவுத் துயரால் வேதனை அடையும் அவர்களின் குடும்பத்தாருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய வீரபத்திரப் பெருமானையும், நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மாளையும் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**பா. காசிநாதன்** M.A, J.P
**அகில இலங்கை சமாதான நீதவான்**
**ஓய்வு நிலை ஆசிரியர், சென்ஜோன்ஸ் கல்லூரி.**

**யா/கொக்குவில் ஸ்தான சி. சி. த. க. பாடசாலை**
**J/Kokuvil Station C. C. T. M. School**
**යා / කොකුවිල් ස්. ශ්‍රී. ශ්‍රී. දෙ. ග. පාසැල**

கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

K. K. S. Road,
Kokuvil.

..... / ..... / 20.....

# இரங்கல் உரை

யாழ் கொக்குவில் மேற்கு சி.சி.த.க பாடசாலையின் அதிபராக கடமையாற்றி 21-05-2015 அன்று அமரத்துவம் அடைந்த அமரர் திருமதி. மங்களகௌரி தயாளநேசன் அவர்களுடைய நினைவு மலருக்கு இரங்கல் உரை எழுதுவதில் மிகுந்த மன வேதனை அடைகின்றேன்.

அமரர் நாட்டில் நிலவிய அசாதாரண நிலைமையிலேயே ஆசிரியப் பணியினை அர்ப்பணிப்புடன் சேவையாற்றி தனது குழந்தைகளை வளர்ப்பதிலும், நோயாளியான தனது கணவரைப் பராமரிப்பதிலும், அதிபராக பாடசாலையைத் திறம்பட முகாமைத்துவம் செய்வதிலும் தன்னுடைய பணியினை செவ்வனே ஆற்றி தனது நோயை சீர்தூக்கிப் பார்க்காமல் அமரத்துவம் அடைந்து விட்டார். சகோதரியும், நண்பியும், சக அதிபருமாகிய அன்னாருக்கு கண்ணீரைக் காணிக்கை யாக்குவதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி. யோ. திரவியநாதன்**
**(அதிபர்)**

# கண்ணீர் காணிக்கை



மண்ணில் 09 - 04 - 1957

விண்ணில் 21 - 05 - 2015

## அமரர் திருமதி மங்களகௌரி தயாளநேசன்

அதிபர் கொக்குவில் மேற்கு சி. சி. த. க. பாடசாலை

நல்லதிபர்க் கிலக்கணமாய்த் திகழ்ந்து
நாமமது நானிலத்தில் நிலைக்கச்செய்து
கொக்குவில் மேற்கு சீ. சீ. பாடசாலையின்
அதிபராய் மிளிர்ந்து
தான் கொண்ட பாடசாலையின் உயர்ச்சிக்காய்
தக்க செயல் பல புரிந்து
கண்ணிமைப் பொழுதினில் மங்களகௌரி
எமை விட்டுப் பிரிந்ததேனோ.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி! சாந்தி!!

துயருறும்
அதிபர் சங்கம்
யாழ்ப்பாணக் கல்விக்கோட்டம்

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 09 . 04 . 1957



உதிர்வு 21 . 05 . 2015

அமரர்

## திருமதி. மங்களகௌரி தயாளநேசன்

(அதிபர். கொக்குவில் மேற்கு C.C.T.M பாடசாலை,
நிர்வாக உறுப்பினர் கொக்குவில் மக்கள் நலன்புரி நம்பிக்கை நிதியம்)

கொக்குவில் மேற்கு C.C.T.M. பாடசாலை அதிபரும், கொக்குவில் மக்கள் நலன்புரி நம்பிக்கை நிதிய நிர்வாக உறுப்பினருமாகிய திருமதி. மங்கள கௌரி தயாளநேசன் அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம்.

அன்னார் அதிபராக செயலாற்றிய பொழுது நிதியத்தின் உதவியோடு பாடசாலையின் கல்வி மேம்பாட்டிற்கு தன்னாலான சேவை புரிந்துள்ளார். அவரது மறைவு பாடசாலை சமூகத்துக்கு பேரிழப்பாகும்.

அன்னாரைப் பிரிந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினர்க்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது
ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகத்தினர்,
கொக்குவில் மக்கள் நலன்புரி நம்பிக்கை நிதியம்,
கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம்,
"சுப்பிரமணியம் மாலதி" ஆரம்ப சுகாதார பராமரிப்பு,
முன்பள்ளி.

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
09
04
1957



மறைவு
21
05
2015

(அதிபர்- யா/ கொக்குவில் மேற்கு சி.சி.அ.த.க. பாடசாலை)

அமரர்

## திருமதி மங்களகௌரி தயாளநேசன்

அவர்கள்

கண்ணியம் நேர்மையோடு கடமையைச் செய்த
திண்ணிய நெஞ்சம் கொண்ட செம்மலே
எம்மைவிட்டு விண்ணகம் சென்றதேனோ
விதியினை என்ன செய்வோம். சொல்லாலும்,
செயலாலும் தூய்மையுடன் பணியாற்றி
எல்லோர் மனங்களிலும் இடம்பிடித்த நீர்
சொல்லாமல் சென்றதென்ன?
சொர்க்கந்தான் அழைத்ததுவா!

உங்கள் ஆத்ம இளைப்பாற்றிற்காக
இறைவனை வேண்டுகின்றோம்.

24.05.2015
வெள்ளாங்குளம்,
மன்னார்.

பிரிவால் துயருறும்,
மன்/ வெள்ளாங்குளம் அ.த.க
பாடசாலை சமூகம்

# கண்ணீர் அஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 1957 . 04 . 09 |  | 2015 . 05 . 21 |

நயினாதீவு பிரதேச சபை அலுவலக பொறுப்பதிகாரி கு.ரவீந்திரன் அவர்களின் அன்புச் சகோதரி அதிபர்

அமரர்

## மங்களகௌரி தயாளநேசன்

[யா/கொக்குவில் மேற்கு சி.சி.த.க பாடசாலை]

நாகம்மாள் வரமளிக்கும் நயினை மண்ணில்
நற்குடியில், குமரையா மகேஸ்வரி
பெற்றெடுத்த தலை மகளே.....
மங்களகௌரி அம்மா சென்ற தெங்கே....
கல்விக் கோர் ஒளி விளக்கு ஏற்றி வைத்து
நயினையிலே சொல்லிற்கோர் இலக்கணமாய் திகழ்ந்தீரே
நல்வியல்பு நற்பண்பு வளர்த்திடவே
யாழ் மண்ணிற் சென்றீரோ
கல்மனது கனிய வைக்கும் கனிவான உன் பேச்சும்
நல் திறனால் உயர்ந்து நின்றீர் நல் அதிபராய்
கல்விப் பணி முடியுமுன்னே
காலனவன் கவர்ந்து விட்டானம்மா.....

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

பிரிவால் துயருறும்
பிரதேச சபை உப அலுவலகம்
நயினாதீவு

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் திருமதி. தயாளநேசன் மங்களகௌரி

(கொக்குவில் மேற்கு சி.சி.த.க. பாடசாலை அதிபர்)



மண்ணில்
1957-04-09

விண்ணில்
2015-05-21

அன்பான பார்வையினாலே அனைவரையும் கவர்ந்திருப்பீர்
அறிவினிலே அறிஞனாய் முழுநிறைவைக் காட்டி நின்றீர்
பண்பாக பிள்ளைகளை பார்போற்ற வளர்த்துவிட்டீர்
ஆசிரியத்தின் விடிவிளக்காய் அயராது சேவை செய்தீர்
அரும் பணிகள் ஆற்றி சமூகத்தில் உயர்ந்து நின்றீர்
ஆதரவாய் அனைவரையும் போற்றி நின்றீர்
பணிகள் யாவும் நிறைவுற்ற நிம்மதியால்
நிரந்தரமாய் உறங்கினீரோ!
இல்லை இடை நடுவில் விட்டுச்செல்ல
உம் இதயம் நின்றதேனோ!
உம் பாச உறவுகளெல்லாம்
பிரிவால் ஏங்கித் தவிக்க காலன் தான்
உமைக் கவர்ந்தானோ!

அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் சந்தி.

பராசக்தி பிறிண்டேர்ஸ்

# கண்ணீர்ப் பூக்கள்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 1957 | | 2015 |
| 04 | | 05 |
| 09 | | 21 |



## அமரர். திருமதி. தயாளநேசன் மங்களகௌரி

(கொக்குவில் மேற்கு சி.சி.த.க பாடசாலை அதிபர்)

அன்பின் ஒளிவிளக்கே! பண்பின் சிகரமே!
பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
நேசமாய்எம்முடன் பழகி
எல்லோருடனும் அன்புமழைபொழிந்து
எல்லாநாளும் எம்முடன் சிரித்துபழகியநீர்
சொல்லாமல் பேசாமல் சென்றீர்
உம்குடும்பத்தின் துடிப்போடுநாமும்
நொந்துநெருடதுடிக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கிறோம்.

N.E.C கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி

ஆசிரியர்கள், மாணவர்கள்,
N.E.C நிர்வாகத்தினர்

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
1957 – 04 – 09



உதிர்வு
2015 – 05 – 21

எமது நண்பன் நிரோஜனின் அன்புத் தாயார்

## அமரர்.திருமதி. தயாளநேசன் மங்களகௌரி

(கொக்குவில் மேற்கு சி.சி.த.க. பாடசாலை அதிபர்)

அரிய நல்லுறவிழந்து
ஆறாப் பெரும் துயர் சுமந்து
ஆறவில்லை எம் நெஞ்சம்
இகத்தினிலே உமைப்பிரிந்து
ஈரவிழி நீர் சுமந்து உற்ற உம் உறவுகளும்
ஊராரும் நண்பர்களும் எக்காலம் காண்பதென
ஏக்கத்துடன் தவிக்கின்றோம்
மாறாத உம் சிரிப்பும் மறையாத உம்முகமும்
மனமுருகும் உம் குரலிசையும் மீண்டும் வாராதோ எம்முன்னே
நாம் வாழும்வரை எம்முள்ளே நீரும் வாழ்வீர்!

அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது பிரிவுத் துயரை நாமும் பகிர்ந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில்.

உங்கள் பிரிவால் துயருறும்
**நண்பர்கள்**

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் திருமதி மங்களகௌரி தயாளநேசன்

*அதிபர் கொக்குவில் மேற்கு சி.சி.த.க. பாடசாலை*



அரவணைத்த உம் பிரிவு அறிந்துள்ளம்
ஆறாத் துயரதனால் ஆறாய்க் கண்ணீர் பெருக
இனிய சொல், ஈகை, பண்பு என்றும்
அனைவரையும் போற்றிட வாழ்ந்தீர்கள்
மற்றவர்க்கு உதவும் பண்பு கொண்டு
எல்லோரும் போற்றிட வாழ்ந்தீர்கள்.
வெற்றி இலக்கு, தயாவெளியீடு வளர்ந்திட
பல ஆலோசனைகள் கூறினீர்கள்
இறைவன் சந்நிதியில் அமைதியிலே
இனிமை காண இறையருள் வேண்டி இறைஞ்சுகின்றோம்.

*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

மண்ணில்
09.04.1957

விண்ணில்
21.05.2015

தயா வெளியீடு வெற்றி இலக்கு
தயா அச்சகம்

# துயர் பகிர்கின்றோம்

செல்லப் பிள்ளை ஞானநேசன்
இல 15/7 1ம் ஒழுங்கை
ஆரிய பாதம் வீதி
கொக்குவில்

தங்கள் குடும்பத்தினராகிய மங்கள ரோசாரி
ஞானநேசன்

அவர்களின் மறைவுச் செய்தியினால் எமது ஆழ்ந்த கவலையை தங்களுடன் பகிர்ந்து கொள்வதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து, அன்னாரின் ஆத்மா இறைவன் திருப்பாதம் அடைந்து இணையில்லா பேரின்ப முத்தியடைய இறையருள் வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

நன்றி

**நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை யுடைத்து இவ்வுலகு**
**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்** - குறள் -

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பு சேவை
முகவர் தபாலகம்
இல. 303 கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. இல. 021 222 5392

*தங்கள் துயரினைப்*
*பகிர்ந்து கொள்ளும்*
*உரிமையாளரும்,*
*சக ஊழியர்களும்,*



# நன்றி நவிலல்





அன்பின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய், பாசத்தின் இருப்பிடமாய்,
நல்லாசிரியையாய், அதிபராய், மக்கள் சேவகியாய்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து எம்மை வாழ வழிகாட்டி
இன்று வானுறையும் தெய்வமாகி விட்ட
எம் குடும்பத் தலைவி **அமரர். திருமதி. மங்களகௌரி**
**தயாளநேசன்** அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து
நேரில் வந்து ஆறுதல் கூறியும்,
மரணச் சடங்கு நிகழ்வுகளில் பங்கு கொண்டோருக்கும்,
வேண்டிய போது பல்வேறு உதவிகள் செய்து நின்றோருக்கும்,
தொலைபேசி, தொலைநகல் மூலம் உள்ளூரிலும் வெளியூரிலும்
இருந்து அனுதாபம் தெரிவித்தவர்களிற்கும்,
மலர்வளையம் வைத்த பாடசாலைச் கல்விச் சமூகத்தினருக்கும்,
கண்ணீர் அஞ்சலி பிரசுரம் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களிற்கும்,
அஞ்சலி உரையாற்றி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும்,
சடங்கு, அந்தியேட்டி கிரியையின் போதும்
ஆத்மா சாந்திப் பிரார்த்தனையின் போதும் வருகை தந்து அன்னாரின்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்த அன்புள்ளங்களுக்கும்.
இம் மலரினை குறுகிய காலத்தில் அச்சிட்டு உதவிய
கொக்குவில் பராசக்தி அச்சகத்தினருக்கும்
எமது இதயம் கனிந்த நன்றிகள்.

**ஆடியபாதம் வீதி,**
**15/7, 1ம் ஒழுங்கை,**
**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

**இங்ஙனம்,**
**குடும்பத்தினர்**

# வம்ச விருட்சம்

வேலுப்பிள்ளை + தங்கரெத்தினம்

குமரையா + மகேஸ்வரி

தயாளநேசன்
ஹரிதரன்
இரத்தினேஸ்வரி
இரத்தினகுமார்
இரத்தினேஸ்வரன்
திரவியநாதன்
சக்திவேல்

மங்களகௌரி
ரவீந்திரன்

தயாளநேசன் மங்களகௌரி

தர்சிகா
\+
ஜெயரூபன்
↓
லசாங்கி


தக்ஷனா

சஞ்சனா

நிரோஷன்

விஸ்ணவி

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் மகா சமாதி



புராசக்தி பிறிண்டேர்ஸ் கொக்குவில் சந்தி.